1970 மார்ச் 30]

திரு. எஸ். முருகையன் : மாடி பஸ்ஸில் பிரயாணம் செய்ய மக்கள் சற்று பயப்படுகிறார்கள். வசதி குறைவாக இருக்கிறது. மாடி பஸ்களைத் தனியார் துறையில்போல் 64 பாசஞ்சர்கள் உட்காரும் அளவில் அரசாங்கப் பஸ்களிலும் வசதி செய்து கொடுத்து, பிரயாணிகளுக்கு வசதியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாடி பஸ்களில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வருமானம் குறையவில்லை. மக்களால் வரவேற்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த தொலைதூர எக்ஸ்பிரஸ் பஸ், மாடி பஸ்களில், முக்கியமாக பயணம் செய்கிறவர்களுக்கு, அதிக வசதிகளைப் பெருக்கித் தருவதற்கு, பஸ் துறை ஒழுங்காக இயங்குவதற்கு, இந்தத் துறையில் மாடி பஸ்ஸின் வசதிக்குறைவான பிரயாண அமைப்பை இப்படி அமைத்துத் தந்த அதிகாரிகள், இன்னும் சம்பந்தப்பட்டவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைபாடுகளை நிவர்த்திக்க கடமைப் பட்டிருக்கிறோம். நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவேண்டிய நிலை இல்லை.

திருப்பூரிலிருந்து பேருந்து பணிகள்.

*604 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து, அரசு பஸ்கள் விடுவதுபற்றி 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) விரிவான ஆய்வு நடத்தியபின் இவ்வழித்தடங்களில் பேருந்துகள் கிடைப்பதைப் பொறுத்து, பேருந்துப் பணியினைத் தொடங்க நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கிடையில் அரசு உடைமையாக்கப்பட்ட ''திருச்சி-காங்கேயம்'' வழித்தடத்தைத் திருப்பூர்வரை நீடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குளச்சல் துறைமுகம்.

*585 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) குளச்சல் துறைமுக வளர்ச்சிக்காக 16 லட்சம் ரூபாயில் திட்டம் வகுத்து அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றது. ஒரு பாலம் கட்டுவதற்கு ரூ. 15 லட்சமும், துறைமுக அலுவலகம் கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும், அதையொட்டி ஒரு கிடங்கு (கார்கோ ஷெட்) கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும் செலவிடத் திட்டமிடப்பட்டு, பாலத்திற்கு 2 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழகத்தின் ஏதாவது ஒரு துறைமுக வளர்ச்சிக்குமட்டுமே உதவ

முற்பகல் 9-30

முடியும் என்று மத்திய அரசு கூறியதால், கடலூர் துறைமுகச் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. குளச்சல் துறைமுக விரிவாக்கம் தடங்கல் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மேற்குக் கடலோரப் பகுதியில் இருக்கிற சிறு துறைமுகம் என்று கருதப்பட்டாலும் முக்கியமான துறைமுகமாக இருக்கிற காரணத்தால் புனர் பரிசீலனை செய்வதற்காக மத்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடத்தி, பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, இது நல்ல துறைமுகம் என்றும், முக்கியமான துறைமுகம் என்றும் இநத அமைச்சு உணருகிறது. தூத்துக்குடிக்கு கிழக்கே இலங்கை இருக்கிறது. எனவே, புயல் காற்று குறைவு. மேற்கு குளச்சல் துறைமுகத்தில் ஆயிரம் அடி வரையிலும் ஆழப்படுத்தவேண்டும். உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நல்ல கருத்து. நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை மத்திய அரசு நிறைவேற்றுவிட்டாலும், மாநில அரசே ஏற்று நடத்தி, அதற்கு உண்டாகக்கூடிய செலவை, பிறகு மத்திய அரசிடம் கேட்டுப் பெறுவதற்கு மாநில அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே' முதலில் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தைப் பின்பற்றிப் பார்த்து, முடியாமல் போகுமானல், உறுப்பினர் அவர்களுடைய கருத்துச் சிறந்ததாக இருக்குமா செயல்பட ஏதுவாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும்.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, அந்த இடத்தில் தேர்தல் வரப்போகிறதே, அதற்கு முன்னலே இது கட்டி முடிக்கப்படுமா உங்களால் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, தேர்தல் வரும், போகும். ஆனல் துறைமுகம் என்பது நீண்டகாலம் நிலைத்து நின்று பயன்தரத் தக்க ஒன்ருகும். தேர்தலுக்கும் துறைமுக வளர்ச்சிக்கும் எவ்வித ஒட்டுறவும் இல்லை.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை உடனடியாகக் கட்டாவிட்டால் எதிர்க்கட்சியில் இருக்கிற காங்கிரஸ் கட்சி ஒரு பெரிய போராட்டம் நடத்தப்போகிறது என்று ஒரு செய்தி வெளியானதே, அதன்படி போராட்டம் நடத்தப்போகிருர்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் போராட்டம் நடத்தத் தேவையில்லை. நாங்கள் மேற்கொள்ளும் நல்ல ஆக்கப் பணிகளுக்கு உதவியாக இருந்தால் போதும்.

Non-judicial stamp papers.

* 589 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is shortage in the supply of non-judicial stamp papers and whether they are not readily available in **district** treasuries; and